<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

ஓ.எஸ்.எண்.390/2016 நாள்: 22.10.2018

<u>பி.டபிள்யூ.1, கே.சி.முருகேசன், குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

சொத்தின் மொத்த விஸ்தீரணம் 4.36 செண்ட். வா.சா.ஆ.2 ன் படி 4.36 செண்ட் பொதுவில் பாதி என்றுதான் கண்டுள்ளது என்றால் சரிதான். கிரையம் பெற்ற தேதியிலேயே கிரைய பெற்ற நபர்கள் விநாயகர் சுவாமி, மாரியம்மன் சுவாமிக்கு பாத்தியம் என்று தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் கோவிலுக்கு காளி பண்டாரம் பூஜை செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அவரே அதை ஆட்சேபணை செய்துள்ளார். காளி பண்டாரம் பூஜை செய்ய மறுத்ததால் சொத்தை கிரையம் பெற்ற நபர்கள் வேறு நபர் வைத்து பூஜை செய்து வந்தார்கள். செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமலுக்கு வந்தது என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் பத்திரம் பி.வா.சா.ஆ.1. அது அமலுக்கு வரவில்லை. அந்த செட்டில்மெண்ட் பத்திரம் என்னை கட்டுப்படுத்தாது. சுவாமி சொத்தை பொறுத்து 1918 ஆம் ஆண்டு சுவாமிக்காக கிரையம் பெற்றவர்களுக்கும் கிராமத்தில் உள்ளவர்கள் கோவில் நிர்வகித்துக் கொண்டு ஆள் வைத்து பூஜை செய்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ன் படி தான் காளிபண்டாரத்திற்கு கிரையம் கொடுத்த நபர்களுக்கு உரிமை ஏற்பட்டது. 1918 கிரைய பத்திரம் படி கிரையம் வாங்கும்போதே இரண்டு சுவாமிகளுக்காக கிரையம் வாங்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது. 1918 பத்திரத்தில் காளி பண்டாரம் ரூ.200/- கொடுத்ததாக உள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு காளி பண்டாரம் பணம் எதுவும் தரவில்லை என்றாலும் வா.சா.ஆ.2 பத்திரத்தை உண்மைக்கு புறம்பாக குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் எழுதிக்கொடுத்தவர்களுக்கு உரிமையில்லை என்றாலும் அது செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. காளி பண்டாரம் அதன் படி சொத்தில் உரிமை அடையவில்லை என்றாலும் சொத்தை அனுபவிக்க வில்லை என்றாலும் சரியல்ல. பூமியானது இனாம் பூமி. பூமியானது யார் யாருக்கு எப்போது இனாம் கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. என்ன காரியத்திற்காக பூமி கொடுக்கப்பட்டது என்று தெரியாது. கோபிசெட்டிபாளையம் செட்டில்மெண்ட்

தாசில்தார் ஏ3 படி நடத்திய விசாரணை பற்றி எனக்கு தெரியாது. ஏ3 விசாரணைக்கு முன்பு இனாம் தாரர்களுக்கு அறிவிப்பு ஏதும் கொடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. ஏ3 உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அந்த உத்தரவு முறையாக அறிவிப்பு அனுப்பி நடத்தப்பட்ட விசாரணை அல்ல என்றால் சரியல்ல. அந்த உத்தரவுக்கு முன்பு விநாயகர் சுவாமி, மாரியம்மன் சுவாமி கோவில் நிர்வகத்து வந்தவர்களுக்கு அறிவிப்பு அனுப்பட்டதா என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி தாவா சொத்து சம்மந்தமாக அவிநாசி உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 19-2004 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்து தாவா சொத்து விநாயகர் சுவாமி மற்றும்மாரியம்மன் சுவாமி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்ககட்டளை பரிகாரம் கேட்டு அது தீர்ப்பாகி உள்ளது என்றால் அது ஒரு தலை பட்சமாக பெறப்பட்ட தீர்ப்பாகும். ஒரு தலை பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யவேண்டும் என்று பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு கீழமை நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தால் தள்ளபடி செய்யப்பட்டு விட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இது வரை அது பற்றி நான் தெரிந்து கொள்ளவில்லை. வழக்கின் பிரதிவாதிகள் யார் என்று எனக்கு தெரியாது. அந்த வழக்கின் பிரதிவாதிகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். நானும் என் மூதாதையர்களும் எந்த காலத்திலும் தாவா சொத்தை அனுபவிக்க வில்லை என்றால் சரியல்ல. 1919 ல் முதல் வரி செலுத்தி நான் அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வரி கட்டியதாக சொல்லும் ரசீது தாக்கல் செய்யவில்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ஏ5 வரிசை வருவாய்துறை ஆவணங்கள் கோபி செட்டில்மெண்ட் தாசில்தார் தவறுதலாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் ஏற்பட்ட ஆவணங்கள் படி நான் சொத்தில் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. நான் அதில் முழுமையாக உரிமை கோருகிறேன். செட்டில்மெண்ட் தாசில்தார் முறையாக விசாரித்து உள்ளார். செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு செல்லாது என்று தீர்ப்பாகி விட்டது என்றால் சரியல்ல. ஏ4 நஞ்சபண்டாரம் நாராயண வாத்தியாருக்கு எழுதிக்கொடுத்தது. அந்த பத்திரத்திற்கு நான் சாட்சி இல்லை. அந்த ஆவணம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. தாவா சொத்தில் மற்ற பிரதிவாதிகள் யாரும் எதிர்வாதம் செய்யவில்லை

என்றால் சரிதான். கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்று நானும் மற்ற பிரதிவாதிகளும் சேர்ந்து தாவா தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாக்கல் செய்த வழக்கில் எனக்கு எந்த பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்.கே.சி.முருகேசன்

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the pleader and admitted by the witness to be correct.*

-Sd-R.Arulmozhiselvi-
Sub Judge,
*Avinashi.*